**செய்தி வெளியீடு எண்: 357** **நாள்: 04.06.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.6.2018) தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர் மாவட்டம், எலாவூரில் 23 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட இரயில்வே மேம்பாலத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார். மேலும், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் 240 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பட்டுக்கோட்டை புறவழிச்சாலை (கட்டம்–2), 26 ஆற்றுப்பாலங்கள் மற்றும் 3 இரயில்வே மேம்பாலங்களை திறந்து வைத்து, 381 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள 3 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் 2 புறவழிச்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியதுவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யவும் மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், எலாவூரில் 23 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட இரயில்வே மேம்பாலத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். இரு வழித்தடமுள்ள இப்புதிய பாலம், ஒபலாபுரம் – சுண்ணாம்புகுளத்தூர் சாலையில் போக்குவரத்து நெருக்கடியை தீர்ப்பதோடு, சுண்ணாம்புகுளத்தூர் மற்றும் எலாவூர் கிராம மக்கள் தங்களின் அன்றாட தேவைகளுக்கு தாமதமின்றி அருகிலுள்ள கும்மிடிப்பூண்டி, கவரப்பேட்டை மற்றும் திருவள்ளூர் நகருக்கு சென்று வர பயனுள்ளதாக அமையும்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம், இராமாபுரத்தில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடையாறு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; வேலூர் மாவட்டம், கலவையில் 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்; திருவண்ணாமலை மாவட்டம், அனப்பத்தூரில் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்; விழுப்புரம் மாவட்டம், விக்கரவாண்டியில் 20 கோடியே 20 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரயில்வே மேம்பாலம்; அருதங்குடியில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர்மட்ட பாலம்; கண்டமனடியில் 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்;

கடலூர் மாவட்டம், தேவன்குடியில் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணிமுத்தாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; சிதம்பரம் டி.எஸ். பேட்டையில் 10 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உப்பனாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; மேலூரில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேலூர் ஒடையின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; சோழதரம் ஸ்ரீமுஷ்ணம் சாலையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அத்தானியில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புங்குனி வாய்க்கால் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; மணச்சநல்லூரில் 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெறுவளை வாய்க்கால் மற்றும் புள்ளம்பாடி வாய்க்கால் குறுக்கே கட்டப்பட்ட 2 பாலங்கள்; புதுக்கோட்டை மாவட்டம், பேயாடிகோட்டையில் 5 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்;

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் சாந்தப்பிள்ளை கேட் அருகே 52 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரயில்வே மேம்பாலம்; வெட்டுவாக்கோட்டையில் 1 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்; அத்திக்கோட்டை முதல் ஆலடிக்குமிளி வரை 21 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பட்டுக்கோட்டை (இரண்டாம் கட்டம்) புறவழிச்சாலை;

நாகப்பட்டினம் மாவட்டம், செருதூரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளையாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; நெய்விளக்கு கிராமத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்; பழையபாளையத்தில் 1 கோடி 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்;

தருமபுரி மாவட்டம், முத்துகவுண்டன்கோட்டையில் 20 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரயில்வே மேம்பாலம்; பேதாதம்பட்டியில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்; மதுரை மாவட்டம், பொட்டாப்பட்டியில் 1 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; பேரையூரில் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்;

திண்டுக்கல் மாவட்டம், பாலாறு கிராமத்தில் 6 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்; சித்துவார்பட்டியில் 1 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்; இராமநாதபுரம் மாவட்டம், மேலகொடுமலூரில் 6 கோடி

ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்; வல்லகுளத்தில் 4 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிருதமால் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வைப்பாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்; சதுரப்பட்டியில் 1 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்;

என மொத்தம் 263 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட 3 இரயில்வே மேம்பாலங்கள், 27 ஆற்றுப்பாலங்கள் மற்றும் ஒரு புறவழிச் சாலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 52 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், அன்னனூரில் 52 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், புட்லூரில் 33 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புதிதாக கட்டப்படவுள்ள 3 இரயில்வே மேம்பாலங்கள்; காஞ்சிபுரம் மாவட்டம் – பழைய மகாபலிபுரம் சாலையில், கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் ஆகிய இடங்களில் 243 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 2 புறவழிச்சாலைகள் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பி. பெஞ்சமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.எஸ். விஜயகுமார், திரு.பி. பலராமன் மற்றும் திரு.வி. சேகர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் திரு.ஆர். கோதண்டராமன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) திரு.ஏ.கே.இராஜதுரைவேல் பாண்டியன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) திரு.எம்.கே.செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.6.2018**